**குறிப்பு:**

*இச்சுவடியில் பூசை செய்யும் மற்றும் அதற்கான தோத்திரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. சில ஏடுகளில் கிரந்தத்திலும் எழுதப்பட்டுள்ளது.*

# R.8813
# அசௌச தீபிகை
# AHSHOWCA DEEBIKAI

Palm leaf: 42 x 4 cms.; Foll: 20

Lines 6 on a Page; Tamil; Old ,Injured; Extent 19,120 letters.

Complete.

Printed.

It deals with Siva Agama.

**தொடக்கம்:**

**கடவுள் வணக்கம்**

*வான வினாயக ரானுமதிக் கொள்ளும்*
*மோன வின்னுலவர் முழுமதி முற்றுவான்*
*தான வினாயகன் தருமபுரத்து வாழ்*
*ஞான வினாயக நற்பதம் போற்றுவாம்*

**முடிவு:**

*அண்டர்தொழுந் தென்கமலை ஞானப்பிரகாச னருள்வடிவாந்*
*திருஞான சம்பந்த னடிசேர்*
*மண்டலமென் செய்வாணை மனுவவன் பாலிக்கவருங்*
*கவிதை மழைபொழிவோன் வளம்பதியானெல்லை*
*தண்டமி ழாகரன் உரைத்தான் ஆசௌசவிதியை*
*தருகவென செந்தமிழான் குரவன் மகிழ்சேர்ந்தே*
*தண்டமிழ் மொழியுமையாள் கொண்ட விடைப்பாகன்*
*கண்ட சிவாகமங்களிலே கண்ட விதிப்படியே*

*ஆசௌச தீபிகை முற்றிற்று.*

Colophon:-

*சீல சுவருஷம் ஐப்பசி மாதம் 20 ம் தேதி*
*வேதாரணீம், மூன்றாம் தெரு. செ.அ.கணபதி*
*பட்டர்ரகர் குமாரர் செல்லைய்யா பட்டாரகர்*
*ஆசௌசதீபிகை-சிவமயம்-திருச்சிற்றம்பலம்.*

**குறிப்பு:**

*இந்நூல் சைவ நெறிமுறை, வழிபாட்டு முறை ஆகியவை பற்றி விளக்குகிறது. இச்சுவடிக் கட்டில் தேவார பாட்டுக்கள் அடங்கிய ஓலைகள் உள்ளன. ஆசௌச தீபிகை நூலில் 175 பாக்கள் உள.*

## R.8814

## கைவல்லிய நவநீதம்-பதசாரம்

## KAIVALLIYA NAVANITAM-PADASARAM

Palm leaf: 30.5 x 4 cms.; Foll: 14.

Lines 10 on a Page; Tamil; Old ,Injured; Extent 14,560 letters.

Incomplete.

Printed.

Same work as D.No.1481 palm leaf

**குறிப்பு:**

*இது D.எண் 1481 ல் கூறப்பட்ட சுவடியிலுள்ளது போன்றதே. முற்றும் இல்லை. சில பகுதிகள் மட்டும் உள்ளது. பதசாரமுள்ளது.*

# R. 8815

# ஆழ்வார், பெயர், நூற்கள்

# ALWAR, PEYAR, NULKAL

Palm leaf: 43 x 4.7 cms.; Foll: 3

Lines 6 on a Page; Tamil; Old, Injured; Extent 2,628 letters. Incomplete.

This manuscript describes various names of Alwars and their books. Author not known.

**தொடக்கம்:**

*கோஷ்ட புரந்தனில் வாழும்*
*செம்ய நாரணாராகப்*
*பலமீதில் பெருக்க முடன்*
*பொய்கை பூதம்*
*பேயாழ் வார் பொன்*
*மழிசைப் பிராணுடனே ........*

**முடிவு:**

*பெருமாள் திருமொழி 105 பாட்டும் பின்புல..*
*... இன்பமுடன் காட்டும் எறி சுழல்...*

**குறிப்பு:**

*ஆழ்வர்களுடைய பெயர்களும் அவர்களின் நூல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. முற்றுப் பெறவில்லை.*

# R.8816

## சொக்கர் அந்தாதி

## CHOKKAR ANTADHI

Palm leaf: 39.5 x 2.8 cms.; Foll: 29

Lines 4 on a Page; Tamil; Old, Injured; Extent 13,456 letters.

Complete.

Same work as that described under D.No.260

**குறிப்பு:**

*இந்நூல் டி.260 ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது போன்றதே முற்றுமுள்ளது.*

# R.8817

## சச்சிதானந்த மாலை

## SUCHITHANADA MALAI

Palm leaf: 23.2 x 3cms.; Foll: 31

Lines 5 on a Page; Tamil; Old, Injured; Extent 9,300 letters.

Complete.

Same work as that described under D.No.1484.

**குறிப்பு:**

*இந்நூல் டி.1484 ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது போன்றதே. முற்றுமுள்ளது.*

# R.8818

# சட்டைமுனி காயகற்பம்

## SUTTAI MUNI KAYAKARPAM

Palm leaf: 25.3 x 2.4 cms.; Foll: 47

Lines 5 on a manuscript; Tamil; Old, Injured; Extent 18,800 letters.

Complete.

This work on medicines is ascribed to Suttaimuni. Various medicines are spoken of in it.

**தொடக்கம்:**

*பாடுகின்றேன் காயகற்பம் ஐங்கரனே காப்பு*
*பரிவான சின்மயத்தின் பாதங் காப்பு*
*நாடுகின்றேன் சித்தருட் பாதங் காப்பு*
*நாதாந்த மனொன்மணிப் பதமே காப்பு*
*தேடுகின்றே னென்றாலுமே......*
*....... களகாயசித்தி சித்தரப்பா*
*சூடுகின்றேன் காயசித்திக்.........*
*...........க்ககேளு கேளே*

உகஉ

**முடிவு:**

*காயசித்தி செய்யுமாறு கம்பஞ் சிட்டுப்*
*பாரம் வைத்தாப் போலே சொன்னேன்*
*நேரிய சித்தர் சொன்ன கருத்துக்கு*
*மென்னுடைய நூலுக்கும் சந்து பாடு*
*தூரப்பா தொட்டல்லோ முடிவரைக்குந் சொன்னேன்*
*சொல்லாதென் றளித்திட்டார் சித்த ரெல்லாங்*
*காரப்பா குருபதத்தைக் கார்த்தா லேயே*
*காயசித்தி பாடினதோர் காட்சி முத்தே உ*

Colophone:-

*சற்குரு கடாட்சமுண்டாக சட்டைமுனி*
*சுவாமியாருடை காயகல்பம்...முடிந்தது.*

*முற்றும்.*

**குறிப்பு:**

*சட்டைமுனிவரால் இயற்றப்பட்டது பல்வேறு வகைபட்ட மருந்து வகைகள் கூறப்பட்டுள்ளன.*

# R.8819
# தத்துவராயர் பாடல்களின் முதனினைப்பு
## TATTUVARAYAR PADALKALLIN MUDALNINAIPPU

Palm leaf: 21.5 x 3 cms.; Foll: 12

Lines 6 on a Page; Tamil; Old ,Injured; Extent/5040 letters.

This manuscript lists first words of the stanzas of Eighteen sasthras of Tuttuvaraya Swamykal.

**தொடக்கம்:**

*தாலாட்டு-பா-ங-னெஞ்சவிரும்பி- னெஞ்சவிருப்புடன்*
*ஷப-கூஷ-நிலமேல்-யெனின்மெய்-ஷ.ப.கரு-*
*கரும்-பிள்ளைத்திருநாமம்-பா-க-மாலாய-மாலரு...*
*ஷ-ச..தாலப்பருவம்-ரு-புக்தா-புகுதா*
*சா-காரணமா-காரணமாக.*

**முடிவு:**

475-பக்-பாடல் 6-பாதமி-வேதமிவை
தானோடு-வேதமிறையாக
476-பக்-பாடல் 8- னரசளவிடவே-அரசானு
மிடமே
477-பக்-பாடல் 24-ரசுரேசரசணரகள-
ரசுரேசருரகள
478-பக்-பாடல் 26-அநெதமனசமன பாடல் முதல்
பதியமுடியும் வரைகமுடிய

**குறிப்பு:**

தத்துவராய சுவாமிகள் அருளிச் செய்த இவ்வடங்கள் முறையின் பதினெட்டுச் சாத்திரத்தின் பாடல்களுக்குரிய தலையெழுத்துக்களைத் தருகிறது.

# R.8820

# உபநிடதம் மூலமும் உரையும்
## UPANITADAM MULAMUM URAIYUM

Palm leaf: 22.7 x 3.7 cms.; Foll: 28

Lines 9 on a Page; Tamil; Old, Injured; Extent 27,720 letters.

Complete.

Printed

Same work as that described under D.No.1515

**குறிப்பு:**

இந்நூல் டி.எண் 1515 இல் குறிப்பிடப் பட்டுள்ளது போன்றதே. முற்றும் உள்ளது.

# R.8821
# ஆத்மாநாத்ம விவேகம்
# ATHMANATHMA VIVEKAM

Palm leaf: 22.7 x 3.5cms.; Foll: 10

Lines 9 on a Page; Tamil; Old, Injured; Extent 6885 letters.

Complete.

Printed.

This book describes relationship between body and soul.

**தொடக்கம்:**

*திருச்சிற்றம்பலம்-ஆத்மாந்தம விவேகம்-ஆத்மாநாத்ம விவேகஞ் சொல்லுகிறோம்- அதாவது ஆத்மாவினி-லக்கணத்தையும்-அநாத்மாவினிலக் கணத்தையும் பகுத்தறிவதாம். அவற்றுள்-ஆத்மா வெண்பவன் அநாத்மாவை யறிகிறவனாம்- அநாத்மாவென்பது தூலச் சூட்சுமங்காரண மென்ன மூன்று சரீரங்களாம்.*

**முடிவு:-**

*-இப்படி மனது புறத்தோற்றவற்றுச் சுகம் என்றிருக்கிற அத்தோய்த் நிலையே சாதாராணமாகப் போனபோது காரண சரீரமுஞ்சிதா பாசனும் பிரம மாத்தரமாகக் கரைந்து போயின வென்றறிக. காரிய சரீரமும் சீவித்திருக்கிற காலத்திற்றேனே வந்தக்கரணம் வேறொரு தோற்றரவும் மற்றுச் சச்சிதானந்த சுபாவமான நிலையைக் கண்ட படியே அலைச்சலறி நின்று பிரம்மாகக் கரைந்து போனபடியினாலவனே சீவன் முத்தனேன்று சொல்லப்படுவள். ஆத்மாநாத்ம விவேகம் முற்றிற்று.*

Colophon:-

*ஆத்மாநாத்ம விவேகம் - ஆசாரிய சுவாமிகளருளிச்*
*செய்த ஆத்மாநாத்ம விவேகமென்று*
*இக்கிரந்த்தைச் சுருக்கித் தமிழ் கூறியது. - மு௦ீது பிறைசை*
*அருணாசல சுவாமிகளாற் பரிசோதித்து வேதாந்த*
*விளக்கமென்னும் அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.*
*முதன் விலை அணா*

**குறிப்பு:-**

*ஆத்மா அநாத்மா பற்றி விளக்கிக் கூறப்பட்டுள்ளது.*

# R.8822

# அருணாசல புராணக் கதை

# ARUNASALA PURANAM

Palm leaf:38 x 3.7 cms.; Foll: 117

Lines 8 on a Page; Tamil; Old, Injured; Extent 1,02,560 letters.

Printed.

**தொடக்கம்:-**

*மிக்க வேத வியாசர் விளம்பிய*
*விக்க தைக்கியை பின்றருள செய்திர*
*முக்கண் வெற்பினை மும்மத வாரியைக்*
*கைக்க ளிற்றினைக் கைதொழு தேத்துவாம்.*

முடிவு:-

பிரம்மாதிடச வருடம் ஐப்பசி மாதம்
திங்கள் கிழமையுந் தசமியும் பெற்ற சுபதினத்தில்
செங்குந்த முதலியா வகையில் வேலப்ப
வாத்தியார் மகன் சுப்பிரமணியன்,
கோயம்புத்தூரிலிருக்கும்
செங்குந்த முதலியற் வகையில் முருகனாத
முதலியாருக்கு அருணாசலப் புராணம் எழுதி
முடிந்தது. சம்பூரணம். அருணாசலயீசுவரர்
பாதாரவிந்தமே துணை. மருதாசலமூர்த்தி பாதந்
துணை.

குறிப்பு:-

நூலின் ஏடுகள் முன் பின்னாக உள்ளன. மிகவும் சிதிலமாகியது. அச்சாகியுள்ளது. இந்நூல் நிலையத்தின் டி.584 அச்சுப்பிரிவில் உள்ளது. ஒப்புக் நோக்கத் தக்கது.

## R.8823-25

Palm leaf:37 x 2.7 cms.; Foll: 112
Lines 6 on a Page; Tamil; Old, Injured.

# R.8823
## பிரகலாதன் கதை
## PRAKALATAN KATAI

Foll: 1-5

Extent 3,300 letters.

This manuscript gives the famous story of Prakalathan.

**தொடக்கம்:-**

*பதிமூன்றாகிய பகர்மடவாருள்*
*திதியென்பவன் தான் சித்தசன் கணையால்*
*மதிமி ... மாலைப்பொழுதில்*
*பதியேனுங் காசிபர் பாதம் பணிந்து.*

**முடிவு :-**

*கோரமாய்ச் சிங்கமுங் கொழுங் கனற்கண்ணும்*
*நாரசிங்கமுமாய் நாதனுமெழுந்து*
*அந்திநேரத்தில் அவன்றன்ன நகத்தால்*
*வந்திரணியனை மடிதனில்வைத்து*
*வயற்றைப் பீரி மாய்ந்தருள் செய்தும்*
*நயத்துடனுலகம் நடுக்கமுந் தீர்ந்து*
*வாய்த்தருளின்மயோர் மனமிக மகழ்ந்தது*
*பூதலந்தனிலே பூமாரி பொழிந்தார்*
*மைந்தனுக்கரசு மகிழ்ந்தருள் புரிந்தார்*
*இந்த நற்கதையை எழில்வருணாபுரி*
*வந்திடும் பிள்ளை மகிபதி குமாரன்*
*திருக்காமியேன்னுஞ் சிறந்திடும் பேருளன்*
*பெருக்கமாய் நாடகம் பேசென்றுரைப்பர்*
*நாட்டியதரும் நல்லூரில் வாழும்*
*பாட்டியல் புலவன் பைந்தமி ழாலே*
*நாடகமாக நானிலமறியப் பாடினேன்*
*பெரியோர் பாதம் பணிந்தே* - *அகவல் முற்றும்*

**றிப்பு:-**

*பிரகலாதன் கதை இந்நூலில் பாடப்பட்டுள்ளது. இது ன்று இந்நூல் நிலையத்தில் வேறு சுவடிகளும் உள்ளன.*

# R.8824

# ஜெயமுனி சூத்திரம் மொழிபெயர்ப்பு
# JAYAMUNI CHUTIRAM MOZHI PEYARPPU

Foll: 1-76

Extent 37,240 letters.

Complete.

This book deals with various stars and its reactions on human beings.

**தொடக்கம்:-**

*... சூத்திரம் மொழி பெயர்ப்பு - சுலோகம்*
*ஸ்ரீமத்கங்காதரசுதம் - சந்தர ரேகாவதம் வகம்*
*சித்சிதம் சர்வ வித்தியானாம் ...*
*தந்த கஜானனம் - சுபாசுப்பலம் - துருஷ்ட்வா -*
*சர்வவேஷாம் பிராணி நாம்பி - ஆதானலக்ன*
*மாரப்ய தரஷ்வ்யம்...*

**முடிவு:-**

*சுக்கிரத்திசை சுக்கிரபுத்தியில் - சருக்கிறாதிய*
*கிரகங்களின் அந்திராதிய மூவகைப் பலன்களில்*
*... திரபலன்கள் - சுக்கிராந்திர பலன் - ஸ்தீரீ*
*புத்திராள் வாசனம் - திரவ்யம் - சுகந்த பரிமளங்கள்*
*பூஷணங்கள் - சுபசோபனங்கள் இவைகள் உள்ளன*

*- சூரியாந்திர பலன்*

**குறிப்பு:-**

*இந்நூல் ஜாதகப் பலன்களைக் கூறுவது. கிரகங்கள் அவற்றினால் உண்டாகும் நன்மை தீமை பற்றி உறைப்பது.*

# R.8825

# வாந்திபேதியெனும் வாகட நூல்

## VANTHI PETHIYENUM VAKATL NUL

Foll:77-105

Extent 19,430 letters.

This book consists of medicines to cure diseases

**தொடக்கம்:-**

*மாஜ்ஜிமை தங்கிய இவ்வுலகத்தின் கண்ணே*
*வாழ்வுற்ற மனிதர் யாவர்களும் பிரதி தினந்தோரும்*
*பிராதாந்திர காலத்தில் நித்திரையை விடுத்து*
*விழித்திருந்து - வினாயக்கடவுள் முதலான*
*தேவர்களையும் பிதர்களையும் ஆசரீர்களையும்*
*தோஷத்திரம் புரிந்து நமஸ்க்கரித்து ...*

**முடிவு:-**

### வாழி விருத்தம்

*சுந்திரமா மூவதோடு தேவர் வாழ்க*
*சுகுண குண சித்தர் முனிவோர்கள் வாழ்க*
*விந்தையேனும் ஊழிநோய் வயித்திய*
*சிந்தை மிகவுணர்ந்து சிகிச்சை செய்யும் மெய்யோர்*
*வாழ்க*
*அந்தமிகு சதுர்வேத புராணநூல்கள்*
*ஆகம சாஸ்த்திர வகைகள் யாவும் வாழ்க*
*மந்தரி நாரணியருளால் புவியின்மிக்க*
*மனிதர் முதற் பல்லுயிர்கள் வாழ்கவென்றே*

*- வாழிமுற்றும்*

**குறிப்பு:-**

*இந்தச் சுவடியில் பல்வேறு வகையான நோய்களும் அதற்கு உரிய மருந்துகள் உபயோகிக்கும் முறைகளையும் கூறுகின்றார். வினாயகர் துதி, சுப்ரமண்யர் துதி, ஈசுவரி துதி, ஈசுவரன் துதி, விஷ்ணு துதி, லஷ்மி துதி, சரஸ்வதி துதி, பிரம்மதேவன் துதி ஆகியவையும் தனிப்பாடல்களாக உள்ளன.*

# R.8826

# புண்ணியா வசனம் செய்யும் முறை
## PUNNIYAVASANAM CHIYUM MURAI

Palm leaf: 23 x 2.9 cms.; Foll: 9

Lines 5 on a Page; Tamil; Old ,Injured; Extent 2,880 letters.

Incomplete.

This manuscript deals with Punniyavasanam.Author not known.

**தொடக்கம்:-**

*யிரண்டு கும்பம் வைத்து புண்ணியா வசனம்*
*பண்ணும்படி*
*ஓம் கணபதியாசனுய நமா*
*ஓம் கணபதி முர்த்ியே நமா*
*ஓம் கணபதியே நமா*
*என்று ஆவாணம் பண்ணிய பின்பு அறிச்சிக்கும்படி.*

**முடிவு:-**

*கோமியமும் இருவுங் கூட்டி பதினோரு மந்திரத்தால்*
*அபிமந்திரித்து - பின்பு நீலவறுணேஷ - கோமூத்திரம்*
*கிருஷ்ணவேணி கோமயம் .. தாதா முறவறணம்*
*பயசுவேதி சுவேதாயா ததிகுச்சியதே கபிலாயாம*
*கிரீத்தகிராஜியம் காபாதக நாசனம் யென்று*
*யிந்த மந்திரத்தினாலும் ஒரு பிறகாறம்*

**குறிப்பு:-**

*புண்ணியதானம் செய்வது பற்றிய குறிப்பு இந்நூலில் உள்ளது. முற்றுப்பெறவில்லை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.*

# R.8827

## முக்கூடற்பள்ளு
## MUKKUDAR PALLU

Palm leaf: 36.5 x2.8 cms.; Foll: 26

Lines 6 on a Page; Tamil; Old ,Injured; Extent 22,776 letters.

Complete.

Printed.

Same work as that described under R.No.535(leaf)

இந்நூல் R.No.535- ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பைக் காண்க. முற்றும் உள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்பட்டுள்ளது.

# R.8828

## பூத நாடி சாத்திரம் (மருத்துவம்)
## PUTANATI SATTIRAM(MARUTHUVAM)

Palm leaf: 28.8 x 3cms.; Foll: 36

Lines 6 on a Page; Tamil; Old, Injured; Extent 24,624 letters

This manuscript deals with medicines to human body. Author Valmikar. This is in verse form.

**தொடக்கம்:-**

ஸ்ரீராமஜெயம்

*மேல்விழி சுங்கிகாணில் விரிந்து கண்ணகன்று காணில்*
*தோவன இமையில் வரக்கண்டால் சொல்லுவர் வருஷம்*
*ஒன்று......*
*சூலையால் வாயுவால் மூலச்சூட்டினால் அன்னம் நீர்த்து*
*கால்கையப் படுவாரென்று கருத்தினில் விதியுயாமே (!)*

**முடிவு:-**

*பொருந்திய வால்மீகர் புவியில் உரைத்த வாறே (15)*
*-பூதநாடி சாத்திரம் முற்றும்.*

**குறிப்பு:-**

*இரு ஒரு மருத்துவச் சுவடி. வால்மீகர் எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. சுரம், சூலை, வாயு, கண்நோய் முதலிய நோய்களுக்கு மருத்துவம் கூறப்பட்டுள்ளது.*

## R.8829

## குற்றாலக் குறவஞ்சி
## CURTALAK CURAVANJI

Palmleaf: 36.4 x 3.5cms.; Foll : 27
Lines 5 on a page; Tamil, Old, Injured, Extent 15,660 letters.
Incomplete.
Printed.
Same work as the one described under No.308 of the descriptive catalogue of Tamil Manuscripts.

**குறிப்பு:-**

*இந்நூலகத்திலுள்ள டி.308 என்ற எண்ணின் கீழ் விளக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடி போன்றது. அதன் குறிப்பையும் காண்க. அச்சிடப்பட்டுள்ளது.*

# R. 8830

## விலை ஓலைச் சாசனம்

## Vilai Olaich Chasanam

Palm Leaf : 38 x 3 cms.; Foll : 2
Lines 6 on a page; Tamil, Old, Injured;
Extent 1100 letters.
Complete.
Subject of this leaf is sale deed.

**முதல்:-**

**சிவமயம்**

*சுபமனம் மகாமண்டலேஸ்வரன் அரியராய*
*தனவிபாடன் பாஷைக்கு தப்புவராய கண்டன்*
*மூவராய கண்டன் சாலிவாகன சகாப்தம் 1730க்கு மேல்*
*செல்லான் என்ற ...*

**முடிவு:-**

*சின்னண்ணன் சேர்வைக்காரன் மகன் பெரிய*
*கருப்பன் அரையான் சீவிதமும் விலைப் பிரமாணம்...*
*இந்தப் படிக்கு இவர்கள் சொல்ல இந்த சாதனம்*
*எழுதினேன் நாலு கோட்டைக் கன்னாலரில்*
*வெள்ளையனாசாரி மகன் வீரணன் எழுத்து*

**குறிப்பு:-**

*இந்நூல் விலை ஓலையாகவும் பிரப்பலூர் நிலந் தொடர்பானது.*

# R. 8831 - 32 ( One codex )

Palm leaf : 31.5 x 2.4cms.; Foll : 24
Lines 4 on a leaf; Tamil, Old, injured;
Extent 9,600 letters.

# R.8831

# ஆறுமுகம் ஞான யோகம் ஐந்து

## ARUMUGAM GNANA YOGAM IYINDU

Foll:3 Extent 1,200 letters.
Subject here is yoga.

**தொடக்கம்:-**

சீர்மேவும் நாவினால் வைத்திடாமல்
செலுத்துடா மனந்தனை அன்னாரு நேரேப்
பார்மேவும் அண்டவுச்சி தன்னிலே
தான்பாயும் டாவாசியுந் தான்பரத்தினுடை
தார்மேவும் மூலமடா தன்னி..ங்கம்
தண்டுமுதல ண்டம்வரை தமராய் நிற்கும்
கார்மேவும் விந்துவல்லோ பி.. மார்க்கம்
கனிந்து மெல்லவாங்கு கண்ணால் பாரே

**முடிவு:-**

எடுத்திடவே மெழுகதுபோலத் திரண்டிருக்கும்
எந்தெந்தச் சரக்குகளு மெல்லாம் நீறும்
அடுத்து மிகத்தாம்பூர நீரைவாங்கும்
அடங்காத வியாதியெல்லாம் அண்டாதோடும்
தடுத்து மிகப்பேசாமல் அண்டமே
விதன்மனமே சா யதாய்த் தவமேசெய்து
கடுத்து மிகத்திரியாதே அகத்தியா நீ
கந்தனுட நூலிதென வைத்து

- முற்றே உருஉ

கல்லுப்பு என்பது வேதாரணிய வுப்பு
அண்டம் என்பது ன்சச்லைதடுதே

**குறிப்பு:-**

மனத்தை மேலான நிலைக்கு கொண்டு செல்வதைக் பற்றி கூறுகின்றது.

# R.8832

# பிராணவாய்வு நினை சாதனை

# PRANAVAYUV NINAI CHADANAI

Foll : 21 : Extent 8200 Letters.

This book deals with Yoga.

**தொடக்கம்:-**

ஆனந்தமாய் நிறைந்த ஆயிபாதம்
அய்யரென்ற கயிலாய மூர்த்திபாதம்
தானந்தமாகி நின்ற குருமுனியின்பாதஞ்
சனகருடன் திருமூலர் கொங்கணர்தான் பாதம்
வானந்தமாகி நின்ற போகமுனியின் பாதஞ்
வதிஷ்ட்டர் முதல் முனிவோர்கள் பாதம் போற்றி
மோனந்தமாகி நின்ற பலதிரட்டைச் செல்ல
மூலாதாரத்திருந்த கணேசன் காப்பே
உகஉ

**முடிவு:-**

பூசியே யந்தியிலே பாவை போல
பூண்டிருந்து மத்திமையை மூலத் தேத்தி
ஆசியே வலசாரி யிடசாரி யாக
ஐந்துதரஞ் சுற்றிவிட மலமெல்லாம் போம்
தேசி யென்ற யோகமது க்ஷணத்தில்
சித்தி திறந்துதான் பாயுமடா வமிர்தம்பாரு
வாசியோகஞ் செய்யச் சுத்தி மூன்றும்
மறையாமல் திறந்து விட்டேன் மார்க்கந்தானே
உசயஉஉ

முற்றிற்று.

Colophon:-

கரிசாலை குப்பைமேனிசிவ கரந்தை வல்லாரை
அவுரி பொற்றலைக்கரிப்பானச் மூலம் குழநுயர்
நிரப்பி இது ஒரு கடிதேனிற் கொள்ள இருவேளை
எல்லா வியாதியு நீங்கும்.

**குறிப்பு:-**

இந்நூலில் பிராண வாயுவை நிலைநிறுத்தி யோகம் செய்யும் முறை விளக்கப்பட்டுள்ளது.

# R. 8833

# வசிய மந்திரம்

## VACIA MANDIRAM

Palm leaf : 11.7 x 3.6cms.; Foll : 26
Lines 6 on a page; Tamil, Old, Injured;
Extent 3,792 letters.
This manuscript describes mantras with the help of yandras.

**தொடக்கம்:-**

ஹரி-ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
நல்ல கணபதியை நான் காலமே தொழுதால்
அல்ல வினை எல்லாம் அகலுமே
சொல்லரிய தும்பிக்கையானை தொழுதால்
வினை தீரும் நம்பிக்கை யுண்டே நமக்கு
வினாயகனார தும்பிக்கை யுண்டே துணை.

வேலும்மயிலும் துணை.

**முடிவு:-**

தெற்கு முகமிருந்து படர்ந்த ஆசனத்திலிருந்து
சங்குயாசி சிவம் பண்ண மந்திரம்
ஓம்கிலியிரி பட்டு பட்டு சுவாக யிது
ஆயிரத்தெட்டு செபிக்கவு ஏதியை
நினைந்து உரு செய விருவிட்டு ஓடுவன
கா...க்குவி எதிபெரட ஓடும் வியாதி.

**குறிப்பு:-**

இந்நூலில் மந்திரமும் அதனால் தீரும் வியாதியும் கூறப் பட்டுள்ளன. எந்திரங்கள் படங்களுடன் உள்ளன.

# R. 8834

# மனுநீதிச் சோழ மகாராச நாடகம்
# MANUNEETHI CHOLA MAHARAJA NATAKAM

Palm leaf: 42 x2.5 cms.; Foll: 116

Lines 5 on a Page; Tamil; Old, Injured; Extent 81,200 letters.

Complete.

**தொடக்கம்:-**

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை
மனுநீதிச் சோழ மகாராசா நாடகம்
ராகம் நாட்டை

பொங்குபுகழ் திருவாரூர் புகழ் பெருகி
வளர்பதியில் புனித ராசன்
திங்ளணி தியாகேச ரடிதொழுது
யென்னாலுஞ் சென்னி சேர்த்து
சங்கீத வேலவன் சோழன்
செந்தமிழ் நாடகத்தின் சரிதைபாட
கங்கு ங்கா கரிமுத்தோன் கணபதி
இக்கதைக்கு காற்ப்ப தாமே. உ

**முடிவு:-**

## சபைவிருத்தம்

விந்தையா சோழராசன் மெல்லியாள் தேவிகூட
மைந்தனும் இல்லையென்று மனமிக மெலிந்துவாடி
சிந்தையில் கிலேசத்தோடும் தியங்கியே புலம்பும்போது
அந்தமாங் துறிகள் சொல்ல அறிவித்துறப்பேண் வந்தாள்.

Colophon:-

ஹரி ஓம் நன்றாகக் குருவாழ்க குருவே துணையாக
வேணும். எங்கள் குருவாகிய முத்துசுவாமி
வாத்தியாயரிடத்தில் வாசித்து ஜீழன் வீரு
முசன்தரையரிடத்தில் நாடகம் கற்பித்து
கொண்ட மேலவிடயலிலிருக்கும், முத்துசுவாமி
வாயாடியாற் குமாறன் பாட்டு வாயாடியாற்
க.சாமி ஞுகபத்தர் மகன் லெஷமணபத்தர்
உ. இவர்களால் நந்தன்

கி. மாசிமாதம் 15 தேதி இந்த சோழராசா நாடகம் ஏற்படுத்தி சிவடி எழுதியது

முற்றிற்று உ.

**குறிப்பு:-**

மனுநீதிச் சோழனுடைய கதை நாடகமாகக் கூறப்பட்டுள்ளது; முற்றும் உள்ளது.

# R.8835

## மருந்து செய்முறைகளும் மருத்துவமும்
## MARUNTU CHAIMURAIKALUM MARUTUVAMUM

Palm leaf:21.7 x 2.8 cms.; Foll: 71

Lines 5 on a Page; Tamil; Old, Injured; Extent 21,300 letters.

Incomplete.

This manuscript deals with medicine. It also describes about preparatjon of medicines to cure deseases.

**தொடக்கம்:-**

*சுரத்துக்கு ரசபான குளிகை*
*துத்தம் துருசு அரிதா ரசம் வெள்ளைப்*
*பாசாணம், வெங்காரம் சமனடை*
*கூட்டி நிறுத்து தூதுச் சாறிலரைத்து*
*குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி*
*வைத்துக் கொண்டு நூற்பது உளதானியிடம்*
*அறிவது சுரம்வந்தால் பசுப்பாலி லாகுதல்*
*சீரகப் பொடி யிலாகுதல் ஒரு உருண்டை*
*கொடுக்கனுல மாற.. ழுனுமாறல சுரம்*
*குளிர்விடும் கை கண்டது.*

**முடிவு:**

இவ்வெந்திரம் நீரு நித்திரை இரப்பிரவார்களுக்கு கூடாது.

இவ்வெந்தி மாயதெ பெருக்கு கட்டனும்

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வ | ய | ந | ம |
| வ | ய | ந | ம | சி |
| ய | ந | ம | சி | வ |
| ந | ம | சி | வ | ய |
| ம | சி | வ | ய | ந |

**குறிப்பு:**

இந்நூல் வைத்தியங்கள் பற்றியும் அவற்றின் செய்யும் முறையும் மாயத்தைப் பற்றியும் தந்திரம் எந்திரத்தைப் பற்றியும் கூறுகிறது. சில தனி ஓலைகளும் உள்ளன.

# R.8836-38(one codex)

Palm leaf: 19.5 x3.5 cms.; Foll: 70

Lines 10 on a Page; Tamil; Old much Injured; Extent 56,000 letters.

# R.8836

## அகத்திய நாயன் முப்பத்தாறு

## AKATTIYAR NAYAN -36

Foll: 1-16

Extent 12,800 letters.

Complete.

It describes about medicines . This book is said to be made by the famous author Agasthiyar.

**தொடக்கம்:**

*சொல்லும் காலத்துலங்கும் நூல் முப்பத்தாறாய்*
*அல்லும் பகலு மறிவுணா- நல்ல*
*கணபதியாம் பூரணத்திற் கூடியென்றும் வாழுங்*
*கணபதியின் பாதமலர் காப்பு.* ..உ

**முடிவு:**

*காரென்ற கருக்குருவுந் தன்னைக் காணத்தப்பாமற்*
*வின்னூலை வையகத்துக் கீழேயே னென்று*
*பார்த்தாக்கா வின்னூல் கிட்டும மங்கையோ வென்றவற்கு*
*குடுக்காய் நிற்குந் தேனென்ற கற்கண்டு*
*பானமேச் சித்திட மென்றார்*
*நானுமிது தீர்த்தமென்று கொண்டு*
*இன்னூலை யுலகுக் விட்டேன்*
*குறிப்பறிய நூல் முப்பத்தாறு முத்தே*

-ந.சா. குருவேதுணை உ

**குறிப்பு:**

அகத்திய முனிவர் எழுதியதாகக் கூறுவர். இதில் முப்பத்தாறு பாட்டுக்கள் உள்ளன.மருத்துவத்தைப் பற்றி இயம்புகிறது. இது போன்றுவேறு பல மருத்துவச் சுவடிகளும் இந்நூலகத்தில் உள்ளன.

# R. 8837

## அகத்திய நாயன் சக்கரவிதி
## AKATTIYANAYAN CAKKARA VIDI

Foll : 17 - 27; Extent : 9,240 letters. Complete.

Begins on 17 Fol. of the manuscript described under R.No.8836.

Same work as that described under R.No.4131 (paper manuscript)

**குறிப்பு:**

இந்நூல் மூவருட விவர அட்டவணையில் R.4131 என்ற எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டுள்ள தாள் சுவடியைப் போன்றதே. அதன் குறிப்புக் காண்க முற்றுமுளது.

# R. 8838

## அகத்தியர் பூசாவிதி
## AKATTIYAR PUJAVIDHI

Full : 28-72; Extent 35,200 letters.

Incomplete.

Begins on 28 Fol. of the manuscript described under R.No.8836.

Same work has been described in many manuscripts in the library. Starting and end of the manuscript are not available.

**குறிப்பு:**

இந்நூலில் முதலும் முடிவும் இல்லை. சுமார் 284 பாட்டுக்கள் இதில் உள்ளன. இது போன்ற தலைப்பில் இந்நூலகத்தில் பல சுவடிகள் உள்ளன.

# R. 8839

# மந்திர யந்திர வைத்தியம்

# MANDIRA YANDIRA VAIDIYAM

Palm leaf : 21.2 x 2.8 cms.; Foll: 13,

Lines 7 on a page; Tamil, old, injured. Extent 2,940 letters.

Incomplete.

It deals with medicine and Yandra to cure human diseases.

**தொடக்கம்:**

ஹரி ஓம், நன்றாக, குரு வாழ்க
மந்திர யந்திர வைத்ய வுண்மை.....
யாந்து வாய்......... விந்த
வுலகத்தவர் களொளித்த வேயுணர
விந்நூல் சொற்..... விந்தை முனியே
யுலகில் வந்துதித்தானேன் யாரும்- வின்.....
மெந்தன் ராஜபண்டித சிகாமணியாகு
மெழின் மிக்கே......

**முடிவு:**

.....வையிலிட்டுத் தாளை தாரணியில்
மாதரெல்லாந் தந்த மென்னே.

**குறிப்பு:**

இச்சுவடி மந்திரம் யந்திரம் வைத்தியம் பற்றி விவரிக்கிறது. இந்நூலகத்தில் இதுபோன்று பல ஏட்டுப் பிரதிகள் உள்ளன.

# R. 8840

# சுப்பிரமணியர் தேசிகர் கலிவெண்பா

# SUBRAMANIYAR DESIKAR KALIVENPA

Palm leaf : 20.2 x 3 cms.; Foll 10

Lines 6 on a page; Tamil; Old; injured; Extent 3600 letters.

Complete.

It celebrates Subramaniya desikar in poems.

**தொடக்கம்:**

சிவமயம்

*பூவிற் சிறந்த தாமரைப் பூந்தடமும் பூவதனி..ர்*
*ரேவிற் சிறந்த சிவாலயமும் பாவலர்கள்*
*செந்தமிழைப் பாடித்திளைப் பதுபோல் வண்டினங்கள்*
*சந்தமும் பாடுகின்ற தண்பணையுங்-கந்தமுள*
*சந்த மகிலன்றியும் பின்றாழப் பொதியமு..று*
*மெந்தத் தொகுதிகளுமே மந்தியே.*

**முடிவு:**

*செந்தாமரை முகமுஞ் சீரார் வெண்ணீற் றொயும்*
*மிந்தா பாரென் பதுபோலேந் திளையே- வ்நதெனக்குத்*
*தோன்றுங் குருபரன் முன்றோன்று நாளென்றென்றே*
*யான்றவன் போடியானியிருந் தேனாய்ந்து*
*திருச்சிற்றம்பலம் சற்குரு தேசிகன் திருவடிகளே*

(சரணம்)

Colophon:-

சிவமயம் கலிவெண்பா

*திருவா வடுதுறையார் தேசிகனைப் போற்றி*
*மருவா வடுவுளத்தின் மானே - குரு வா..டு*
*காள மார்கண்டத்துக் கண்ணுத ளா னென்றென்றேக்*
*காள மார்ததாத் தொலிக்குங் காண்*

*ஷண்முக சற்குரு தேசிகன் துணை.*

**குறிப்பு:**

*வாலி கண்டபுரம் அருணாசலம் என்பவர், திருவாவடுதுறை யாதீனச் சுப்பிரமணி தேசிகர் பேரில் பாடிய கலிவெண்பா வாகும்.*

# R. 8841

## மருந்து செய்முறைகளும் மருத்துவமும்
## MARUNDU CEIMURAIKALUM MARUTHUVAMUM

Palmleaf : 16.7 x 2.3cms.: Foll : 53; Lines 5 on a page; Tamil; Old; Injured; Extent 10000 letters.

Complete.

This manuscript describes various medicines and diseases. Author not known.

**தொடக்கம்:.**

*ஒரு விரகனிடை ரசம் வாங்கி கலத்தில்*
*போட்டு பூசனிக் கொடி காம்பு ரெண்டும்*
*அரைத்து அந்த இலையை தானே அரைத்து*
*குகை பிடித்து சீலை*
*செய்துரு விருஷ யிலை புடம் போடவும்.*

முடிவு:

மகண்ட குப்பிசம் பதிமூன்று நாள், கறணி
கசன்னிக்கு மூன்று மாசம், பக்கின்
னேத்திந்துக்கு எட்டு நாள், ரெத்தாட்சிக்கு
பத்து நாள், பிற லாப சன்னிக்கு பதினாலு நாள்,
சிக்குவாக சன்னிக்கு பதினாறு நாள்,
அபினியாய சன்னிக்கு பதினைந்து நாள்,
இருப்படி பதிமூன்று சன்சிக்கும் நாள்
அறிய வேணும் மென்றவாறு

உ99உ

சிவமயம்-அபையாம்பிகை துணை-
ரெங்கனாதன் துணை.

குறிப்பு:

இந்நூல் மருத்துவத்தைப் பற்றியது. நோய்க்கு மருந்தும், பத்த்யமும் விவரிக்கிறது. இடையே ஏடுகள் சில கிடைக்கவில்லை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

## R.8842

## புறநானூற்றுப் பாடல்கள்
## PURANAANUTRUP PATALKAL

Palmleaf : 35.6 x 3.9cms.; Foll : 5; Lines 11 on a page; Tamil; Old; Injured; Extent 8250 letters.

Incomplete.

This manuscript deals with the early Tamil kings and their wars.

**தொடக்கம்:**

*தடைத்திருந்த நெடுங்கிள்ளியைக் கோவூர் கிழார் பாடியது.*

*இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்*
*கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்*
*நின்ன கண்ணியு மாரிமிடைந் தன்றே, நின்னொடு*
*பொருவோன் கண்ணியு மார்மிடைத் தன்றே*
*யொருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே*

*இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனாற்*
*குடிப்பொரு ளன்றுதுஞ் செய்தி கொடித்தேர்*
*நும்மோ ரன்ன வேந்தர்க்கு*
*மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே.*

**முடிவு:-**

*...காதல் பெருகிக்களி செய்யவக்களியா*
*கோதையுந் தாருமிடை குழைய மாதா*
*கலந்தாள் கலந்து கடைக்கண்ணாற் கங்குற*
*புலந்தாள் புலரியம் போழ்து.*

*உண்ணிலவு நீர்மைத் தாயொவாப் பயன் சுரந்து*
*தண்ணளி சூழ்ந்தின் பந்தாமலர்ந்து*
*கண்ணெ கிழந்து நீங்கவரிய நிழலுடைத்தாய்*
*நின்றே மக்கேயோங்கிய தோர் சொலையுள.*

**குறிப்பு:**

*புறநானூற்றின் பாடல்கள் பல கொண்டுள்ளது முன்னும், பின்னும் பாடல்கள் இல்லை. பாடல்களுக் கிடையில் பாடியோர் பெயரும் பாட்டின் தலைவன் பெயரும் உள.*

# R. 8843

# வாசுதேவ மனன விவேக சாரம்

# VASUDEVA MANANA VIVEKA CHARAM

Palmleaf : 23.8 x 4cms.; Foll : 239; Lines 11 on a page; Tamil; Old, injured, Extent 264000 letters.

Complete.

This manuscript elaborates Siva agamas. Author not known.

**தொடக்கம்:**

*அன்னையாகியும் தந்தையாகியு மென்னை*
*யாளும் மெழிற் குருவாகியு*
*மன்னுமாபதி யாகிற மக்க யந்தன்னையே*
*.. தியின் னூலினைச் சாற்றுவோம்.*

**முடிவு :**

*...இங்ஙனஞ் சொல்லப் பட்ட யுத்தி*
*களினாலே பஞ்ச கோச சொரூப மாகிய சரீரத் திறையத்துக்கு*
*ஆத்மத்வங் கூடாதபடியால் யெவன் தேகேந்திரியாதி*
*விலசஷணனாகிய ஆத்மானாற் மாய பிரகரணம் சம்பூரணம்உ*
*திருச்சிற்றம்பலம்உ குருநாதன்றுணை.*

**குறிப்பு:**

*இந்நூல் சைவ ஆகமத்தைப் பற்றி கூறுவது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. முற்றுமுளது. உரை நடையில் அமைந்துள்ளது.*

# R. 8844

# ஏலக் கன்னி சரிதை

# ELAKKANNI CHARITAI

Palmleaf : 36.5 x 2.5cms.; Foll : 106; lines 5 on a page; Tamil, Old, injured, Extent 70000 letters.

Complete.

Paranjothi Anand Sawamigal, the author of this work, has sung, ` the story of Elakkanni.

**தொடக்கம்:**

*சீர் கொண்ட வுமைபாகன் வரமதினால் அவதரித்த*
*செல்வியான் பேர் கொண்ட யேலகண்ணி சரிதைதனை*
*யிப்புவியினுக்கு எடுத்துச் சொல்ல வார் கொண்ட*
*தையலேறு வல்லமையின் மணவாளன் மனம் பொளிந்த*
*கார் கொண்ட மேனிற்..ங்குசனைப் பதந்தொழுது*
*கருதினேனே.*

**முடிவு :-**

## வாழி விருத்தம்

*யீசனும் உமையாள் வாழி, யினிது...வாழி,*
*தேசிகன் சுப்ரமண்யர் தெய்வானை வள்ளி வாழி,*
*நேமாய் நெடுமால் திருவும் நீள்புவியாறு வாழி,*
*வாசி..ம் ஐவராசர் மங்கையர் வாழிதானே.*
*இந்திரனிந்திராணி வாழி, யினிதுள்ள தேவர் வாழி,*
*சந்திர சூரியரும் வாழி, சகல தேவதைகள் வாழி,*
*அந்தணர் கண்ணாளர் வாழி, அறுமறைவேதம் வாழி,*
*இந்த மன்னுலகில் வாழும் யாவரும் வாழி தானே.*
*பாடினோர் படித்தோர் வாழ்கப் பரிவுடன் கேட்டோர் வாழ்க,*
*ஆடினோர் அரங்கேற்றிவைத்தோர் யாவரும் வாழ்க*
*வாழ்க, நீடிய நாடகத்தை நேருடன் விளம்ப வெண்ணிப்*
*பாடிய பரஞ்சோதி சுவாமி பரிவுடன் வாழ்கத் தானே.*

Colophon:

*சேய வருடந்தனில் மீனமாசந் தன்னில்*
*சேர்ந்திடும் நாள் குருவார மிரண்டாந்தேதி*
*நய...லமர்தயோகம் மங்கல நாள்*
*தானரிய நவின்ற காதை*
*பயனறிந்து யேலகன்னி பாதந்தன்னில்*
*...ணங் செய்து பரவிவாழும்.*

*செயம் பெறவே யாவர்களும் புகழந்து பாடச்*
*செப்பினே னிப்...*
*நாயகன் வீரவாகு நலமுளம் ரவிலவந்த*
*தாயகன் பரஞ்சோதி யானந்த சாமியார்...*
*கத்தைச் சூட்டினேன் கவியாலாய்ந்து*
*நேயமாய ரவர்கேட்டு நீனிலம் வாழ்க...*
*நின்ற செல்வன் க்ஷேட்டனாஞ் சபாபதி*

*யானந்த ரீன்ற*
*நன்பனடி தாள்பணிந்து...சுவாமியார்*
*நவின்ற காதை*
*யின் புவியில் மிக மகிழ்ந்து யினிதாய்*
*சொன்ன யியற்றினேன் யான்*
*அன்புடனே சந்திரகாசன் காதை*
*அழகேல கன்னிகதை யருள்.*

**குறிப்பு:**

*பரஞ்சோதி யானந்த சாமியார் அவர்கள் இயற்றியுள்ளார். இந்நூல் கண்ணி வடிவில் பாடப்பட்டுள்ளது. படித்து இன்புறத்தக்கது. முற்றமுளது.*

# R. 8845

# மருந்து செய்முறைகள்

# MARUNDU CHAIMURAIKAL

Palmleaf : 30 x 3cms.; Foll : 51; lines 4 on a page; Tamil, Old, Injured, Extent 12000 Letters.

Incomplete.

This manuscript describes many drugs and their preparation.

**தொடக்கம்:**

*பித்னாற்பதுக்கு சூரணம்*
*சீரகம், அதிமதுரம், கருஞ்சீறகம், சதைகுப்பை*
*மகரப்பு, லவங்கம், வகை கர்பூரம்*
*கொத்தமல்லியிலை, சீனிச்சள்ளாபூ*
*திரிகடிப் பிரமாணம் சாப்பிட்டு வெண்ணீர்*
*சாப்பிடவும். இதற்கு நதிபளடம் விடவும்,*
*ஆவின் மோறு நெய் கூட்டிக் கொள்ளவும்.*

**முடிவு:-**

*சாதிலிங்கம், வீரம், பூரம் வகை காளடை கவ,*
*ரசம் தாளகம், கெந்தகம், துத்தம், சாதிக்காய்*
*தறக்கோம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோஸட்டம்*
*சித்தரத்தை, தேசாவரம், அக்கிலாக்காரம்*
*திப்பிலி மூலம் சோதி, சன்னி நாகபகம்,*
*ஓமம், வகை கர விடை க., வெய்யிலில்*
*காய வைத்து சூரணம் செய்து, கலவத்தில் போட்டு*
*அரைத்து குன்றியிடைக்கு பிடியில் வைத்து*
*சாப்பிடவும். தீறும் வியாதி மந்தாரகாசம்,*
*சுவாச காசம், வயிறு வலி, சன்னிதோசம்,*
*சூதக வாய்வு, ரத்தப்பிரமேக மகாமாலை,*
*நீர்க்கடுப்பு, ரெநதி சுந்தாபம், சூலைகுன்மம்,*
*அரையாப்பு, இதுகள் தீரும்.*

## பத்தியம்

கத்திரிப்பிஞ்சு, பாசிப்பருப்பு, துவரைப்பருப்பு,
வெள்ளாட்டு மாமிசம், பசுவின் மோறு, பசுநெய்,
கூட்டுக் கொள்ளவும்.
மருந்து ஏழுவேளை சாப்பிட்டு, ஏழாம்நாள்
பத்தியமுரித்துக்கவும். ஓமத்தை அரைத்து
கொதிக்க வைத்து, தேய்த்து முழுகவும்.
கரப்பான பண்டம், ஸ்ரீபோகம் ஒரு மண்டலம்
ஆகாது; திரிசாதமெழுகு.

**குறிப்பு:**

இந்நூல் இயற்றிய ஆசிரியர் பெயர் அறிய முடியவில்லை. பலவகை நோய்களும், அந்நோய் நீக்க மருந்துகளும், அதற்குண்டான பத்தியமும் கூறப்பட்டுள்ளன. இதுபோன்று பல சுவடிகள் இந்நூலகத்திலுள்ளன. ஆராயத்தக்கது.

# R. 8846 - 8 ( One codex )

Palmleaf : 15 x 4.4cms.; Foll : 30; lines 11 on a page: Tamil, Old, Injured, Extent ; letters.

# R.8846

# காசி துண்டி ராஜ கணபதி திருவருட்பா
# KASITUNDIRAJA GANAPATHY TIRVVARUTPA

Foll : 1-6; Extent 2910 letters.

Complete.

Kasi Madam Shri Kumaragurpara Swamygal is the author of this work. It deals with Ganapathy of Benares.

**தொடக்கம்:**

*சீர்கொண்ட காசிநகர் சேர்துண்டி ராச னெனும்*
*பேர்கொண்ட வையத்திற்குப் பேசுபுகழ்த்-தார்கொண்ட*
*நற்றிருப் பாட்டிரைந்து ஞாலமிசைத் தொண்டரெலாம்*
*கற்றிருப்பார் மேலாங் கதி.*

**முடிவு:**

*பாகமே யில்லாத நான்வார ணாசியிற்*
*பரவுமொரு மணிகன்னிகைப்*
*பாகீரதிக்குள் ளநாயாச மாகமெய்ப்*
*பாரம்விட வருளளிப்பாய்*
*காகமா தியசரா சரமெலாங் கதிபெறுங்*
*காசிவாழ் துண்டிராச*
*கணபதி யெனும் பெரிய குணமேருவேயருட்*
*கருணாநி திக்கடவுளே.*

**குறிப்பு:**

*காசி மடம் த.குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்ததாகச் சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலகத்தில் D. எண் 1623 சுவடியிலும் உள்ளது. ஆராய்ச்சி நோக்கிற்குச் சிறந்து விளங்குவது. காசியிலுள்ள துண்டி விநாயகரைப் பற்றி பாடப்பட்டுள்ளது.*

# R. 8847

# சிவஞான போதம்

# SIVAGNANA POTAM

Foll : 8 - 22; Extent 7920 letters.

Incomplete.

It deals saivism. The author is Maikinsda devar.

**தொடக்கம்:**

*"மலர்தலையுல*
*கல்லானிழன்*
*தம்மையுணரும் நூல்*
*முதற்சூத்திரம்*
*அவனவளது உதாரணம்"*

**முடிவு:-**

*" ஒரு பதமடித்*
*ஐவகைபஸா*
*ஞானமுதலி*
*கையும் பத*
*ஆதிதேவனு*
*ரயும்பரிசி*
*எனபேரிடு*
*தேவதேவ*
*நதிவேத*
*சாயைபோ"*

**குறிப்பு:**

*மெய்கண்ட தேவர் என்பவர் இயற்றியது. இந்நூலை யொத்த பல சுவடிகள் இந்நூலகத்தில் இதே போன்ற தலைப்பில் உள்ளது. ஆராயச் சிறந்த பயனை நல்கும். முற்றும் இல்லை.*

# R. 8848
# பிரபோதச் சந்திரோதயத் திரட்டு
# PRABODACH CHANDRODAYA THIRATTU

Foll : 6; Extent : 3600 letters.

This manuscript describes about on Vedandas.

**தொடக்கம்:**

பாயிரம்

" திரு மடந்தை .. லுமிராக பரியுடற அமாவிமாந்
உற்பத்திச் சருக்கம்
நீர் கொண்ட பெருஇடையினோடு அத்தவிதமவர்
போந்து விகாரம் இருள்தனை யொளி
மோகன சோடச்சி சருக்கம்
இடம் பெறுஞ் சேர அகுஞ்சிறையான்
மாசுறு மாய்ப்பா கண்டகங்கலங்
விலைலிவே தருமமாவதுவே அன்னநல்லறம்"

**முடிவு:**

"வேதாந்தச் சருக்கம் என்றுபுகன்றவே
அந்த மாற்றங் பிரபோதன முடிசூடுக்கரு
தேவாமணி பொங்குக"

**குறிப்பு:**

இந்நூல் வேதர்ந்தைப் பற்றிக் கூறுவதாக உள்ளது. இது போன்று இந்நூலகத்தில் உள்ள சுவடிகள் ஆராயதக்கன.

# R. 8849

# திவாகரம்

# DIVAKARAM

Palmleaf : 39.5 x 3.3cms.; Foll : 33, Lines 5 on a page; Tamil, Olld, Injured. Extent 13860 letters.

Complete.

Same work as D.No.25 Palm Leaf Manuscript.

**குறிப்பு:**

*இந்நூல் இந்நூலகத்திலுள்ள D.No.25 நூலைப் போன்றதே. இதே போன்று பல சுவடிகளும் உள்ளன. ஆராயத்தக்கது.*

# R. 8850

# பிரம முனி வைத்தியம்

# BRAMAMUNI VAIDHYAM

Palmleaf : 31.3 x 3.4cms; Foll : 82: lines 7 on a page; Tamil, Old, Injured; Extent 71,176 letters.

Incomplete.

This manuscript deals with medicines and medical practices.

**தொடக்கம்:**

*"...ர்ன சோதி சின்மயஞான சோதி*
*ஆறணி கொன்றை வூறணிந்தறனைப் போற்றி*
*வாமன்னடிகள...ங்கியே வயித்தியநூலை*
*காரணமாகப் பாடகணபதி காப்புத்தானே"*

உகஉ

**முடிவு:-**

"கட்டியதோர் நாகத்தில்...
சேரில் கணங்கோன்னாலே தையிது கண்டுபாரு
திட்டமாய் நல்லோகம் நவரோதனங்கள்...
தோய்த்து போவியிலிட்டு நாட்டியே
புடம்போட நீறும்பாரு நலமான
மால தேவி சிலையும் லுங்கம் சூ...
வீர மோருடன் சினம் சிறப்பான்
கேந்தியோடு கேன ரிபூரம் தட்டியே
எழாசண மறுபத்துனாலும்...."

**குறிப்பு:**

இந்நூல் வைத்தியம் பற்றி கூறுகின்றது. மருந்து செய்முறைகளை நன்கு விவரிக்கின்றது. முடிவுறவில்லை.

# R. 8851

# சிவதருமோத்திர உரை

# SIVA DARUMOTHIRA URAI

Palmleaf : 33 x 3.5cms.; Foll : 385; Lines 9 on a page; Tamil, Old, Injured; Extent 3,79,800 letters.

Complete.

This manuscript is Viruthams deals with Siva Dharma.

**தொடக்கம்:-**

மலைதரு மகள் பெற்றமகனைக் கயமுகத்தனை
மனத்தெழுதி யானலறபிணி பிறப்பறவனுக்
களையகத் தியமுனிக் கருளினாலு லப்பில
கருணைக்கடல் லுருத்திரனு ருத்தனிலுதித்த...

முடிவு:-

*விதிதிகழுவே தாகமவுணர் வாயே*
*வினைதீர்க்க தமுகமா மொகமு*
*முகமாயா கருவேயோ மதகரி*
*பெழுவாய் வலிமுகமா மாமனா*
*வாழும் பொதிமலை மீதே*
*புரிமுனி தாளெ புகழ்வாமே*

*உளஉக.*

*பனிரெண்டாவது கோபுரவியலுரை முற்றும்.*

**குறிப்பு:**

இந்நூல் விருத்தப் பாக்களால் ஆனது. முற்றும் உளது.

# R. 8852

# பிரம கீதை

## BRAMAH GEETHAI

Palmleaf : 20.2 x 3.7cms.; Foll : 104: Lines 12 on a page of the manuscript, Old, Injured, Tamil.

Extent 77,376 letters.

Completed.

This manuscript deals with Bramah Geetha; It is in prose.

*நயிமிசாரணிய வாசிகளாயிருக்கிற சகலமான*
*ரிஷிகளுஞ் சூதரைக் கேட்கும்படி வாரீர். சூதரே*
*சங்குறகமாகவும் விஸ்தாரமாகவுஞ் சகலபுராணி*
*முரு சொன்னியே யோது ஏமாப்பில்லாத*
*பிரம கீதை....*

**முடிவு:**

....குருவாயிருக்கிற சூதரைச் சாட்டாங்கமாக
நமஸ்கரித்து அவர்களுக்குள்ள...பையள
சமுத்துக்குரு ஷடனாசனம் மரவுரி தண்டு முதலான
கடமையளெல்லாங் கொடுத்துக் குருபூசை பண்ணி
யிறுதயத்திலே யிருக்கிற பரமசிவனை யனுசந்தானம்
பண்ணிக் கொண்டே யிருந்தார்கள்.
பிரமகீதை பனிரெண்டாமத்தியாய முற்றும்
குருசுவாமயனுடைய பாதாரவிந்மேகெதி
திருச்சிற்றம்பலம்.

**குறிப்பு:**

இந்நூல் பிரம கீதையைப் பற்றி கூறுவது. உரைநடையால் இயற்றப்பட்டுள்ளது. பன்னிரண்டு அத்தியாயம் உள்ளன. முற்றுமுளது. படித்து இன்புறத்தக்கது

# R. 8853

# ஞான அனுபவம்
# GNANA ANUBAVAM

Palmleaf : 27.2 x 3cms.; Foll : 7; Lines 6 on a page; Tamil, Old Injured. Extent 4032 letters

This manuscript tells that one has to get Gnanam through a guru.

**தொடக்கம்:**

சத்தினிபர்த முதிர்ச்சியினாலே ஞாநாசாரியனை

யடைந்து ஞாந தீட்சையைப பெற்றுச்
சிவாகமமுஞ் சிவானுபூதியுடைய ஞாநவான்களே
ஞாநமார்க்கம் அனுட்டிக்க கடவர்.

**முடிவு:-**

...குருவை வுண்மை நிலையில் பூசன
முர்த்தி மூலதால் சிறுயித்தி யாசமனங்
பாக்கியங் கொடுத்து திருவடிவிளக்கி கேந்த
புட்பங்களால் அலங்கரித்து நைவேத்தியா
சமநங்தூப தீபங் கொடுத்து செயிது சாத்தும்பூ.

**குறிப்பு:**

இந்நூல் குருவைக் கொண்டு ஞானம் அடைவதை விளக்குவதாக உள்ளது. உரைநடையில் அமைந்துள்ளது. சிறிய நூல் ஆகும்.

# R. 8854

## சம்ப சரக்குகளின் குணம்

## SAMBA CHARAKKUKALIN GUNAM

Palmleaf : 24 x 2.7cms.; Foll : 20; Lines 4 on a page; Tamil, Old, Injured, Extent 5760 letters.

Incomplete.

This Manuscript describes with indigenous medicines. It consists of several stanzas.

**தொடக்கம்:**

மூன்றிலே யொன்றதாகில் மூடிகீடி வாதம் போகும்
தோன்றிய பித்தமாகில்....
ஆன்றதோ சிலேற்றும மாகில் ணாலிரேண்றேன்ற தாகும்
தூன்றிய மதியினு...ள்ளுவோர்க்கே.

**முடிவு:**

நீளமுள்ள கைங்கால் னேறானது சூலையறும்
போளந்த மாறுவளி வீக்கம் வயத்தில் உப்பல போக்கும்
சீரிலிண... மாதே முறிந்தகால் மாத்துமே
வீசும்புயல் அனும்மீதே அதும் மீதே தடிய
திருடன் தாளோதே முறிந்தகால்.

**குறிப்பு:**

இந்நூல் வைத்தியம் சம்மந்தமாக உள்ளது. முடிவுறவில்லை.

# R. 8855

# இராசாங்க நாடி சாஸ்திரம்

# RAJAANGA NADI CHATHIRAM

Palmleaf : 19.5 x 3.3cms.; Foll : 14; Lines 6 on a page; Tamil, Old, Injured, Extent 4200 letters.

Complete.

This manuscript elabarates the subject of Astrology and medicens very well.

**தொடக்கம்:**

*வாதமது னாறெனும் பிதானந்து சற்குற*
*மயிலதுபோல நடைநடைந்து மயங்குமாகில்*
*சேதமது யில்லை என்பதாறா மாண்டில*
*செப்பலாம் மரணமென்று தீர்க்கமாக*
*நாதமது குறைந்து விட்டால் போலே கண்டால்*
*நாவெட்டில் மரணமென்றே நம்பலாகும்...*

**முடிவு:**

*யியம்பிணாற நாடி யெல்லாமிதனுக்குள்....*
*பஞ தஞசலலாது வேறொன்றிலது*
*யியம்பிணாறது போக செந்தூறங்கள்*
*யியம்பிணாறலேகியங்கள் யெணசன தாணும்*
*யியம்பிணாற் யின்னமொரு குடிச்சம்*
*சொல்வேன் யினிதான பரப்ப வகைறாசாணிங்கள்*
*யியம்பிணாற யிருதயமே நிலைபண்ணிக்*
*கொண்டு வாயே.*

*உயரு -*

*ராசாங்கணாடி முற்றும்*
*குருபாதமே கெதியுண்டு.*

**குறிப்பு :**

ஜோதிடம் மற்றும் மருத்துவக் குறிப்புக்களைக் கொண்டுள்ளது. முற்றுமுளது. இயற்றியவர் பெயர் குறிப்பிடவில்லை.

# R. 8856

# நன்னூல்(சொல்)

# NANNUL (CHOL)

Palmleaf : 10.2 x 3.4cms.; Foll : 16; lines 6 on a page; Tamil, old, injured; Extent 3840 letters.

This manuscript deals with grammar about words.

**தொடக்கம்:**

*முச்சக நிழற்று முழுமதி முக்குடை*
*அச்சதனடி தொழுத தைகுவன் சொல்லே.(க)*
*ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்றா*
*இருதினை மைம்பாத் பொருளையுந் தன்னையும்*
*மூவகையிடத்தும் வழக்கொடு செய்யுளின்*
*வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.*

**முடிவு:**

*நிலம், நீர், தீ, காற்று, வானம்,*
*நன்னிலம், தண்ணீர், வெந்நீர் இவை*
*முதலானவை இலக்கணமுடையன இன்முன்*
*என்பதை முன்றில என்றும் நகர்ப்புறம்*
*என்பதை*
*புறநகறம், புறவுலா என்பதை*
*உலாபுறம் என்றும், கண்மி என்பதை*
*மிகண் என்றும், கோவில் என்பதை*
*கோயில் என்றும் பொதுவில் என்பதை*
*பொதியில் என்றும் வழங்கும் இவை முதலானவை*
*இலக்கணவொலி.*

**குறிப்பு :**

இந்நூல் சொல் இலக்கணத்தைக் கூறுவதாக உள்ளது. சொல்லைப் பற்றிக் கூறுகின்றது. தமிழில் உள்ள பழைய நன்னூலின் ஒரு பகுதி.

# R. 8857

# பெரியபுராணம் போற்றிக் கலிவெண்பா

## PERIAPURANAM PORTRIK KALIVENBHA

Palmleaf : 20.5 x 4; Foll : 20; Lines 8 on a page of the manuscript; Tamil, Old, injured; Extent 1,30,400 letters.

**தொடக்கம்:**

*மன்னிய வன்றொண்டரருள் வாய்திருத்தொண்டத்*
*தொகைபோற்*
*பன்னிய போற்றிக்கலிவெண் பாப்பகர - நன்மைதருஞ்*
*செம்பவளத் தந்திமுகத் திங்கடரிக் குஞ்சடிலத்*
*தம்பவளத் தந்திமுகத் தன்*

**முடிவு:**

*.... பொற்பணிக் காளான முறைபோற்றி*
*நற்கமலை வாழ்திருக் கூட்டச்சதக மாலை*
*வகுத்தோரிக் காதலன்பர் போற்றிக்*
*கலிவெண்பா வோதிதான்*
*சீரார் சதாசிவதேசிக செல்வன் கருணை*
*கூர் தியாகராசக்குரு.*

*- திருச்சிற்றம்பலம்.*

**குறிப்பு:**

*பெரியபுராணத்தை வாழ்த்திப் பாடப்பட்டது.*

# R. 8858 - 66 (one codex)

Palmleaf : 20 x 4.1cms.; Foll : 162: Lines 7-8 on a page; Tamil, Old, Injured.

# R. 8858

# ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

# ALUDAIYA PILLAIYAR THIRUTHTHOUAI

Foll : 4; Extent 1984 letters printed. Author manikkavasakar.

**தொடக்கம்:**

*பூவார்திரு நுதன்மேற் பொற்சுட்டி*
*யிட்டொளிரக்*
*கோலாக்குத்து சிலம்புரற்ற*
*வோவா தழுவான பசித்தானென்றுங்*
*கிறைவன் காட்டத்*
*தொழுவான் .. யாதீர்க்குந் தோகை*
*வழுவாமே முப்பத்திரண்டற முகசெய்தான்*
*முதிராத செப்பொத்த கொங்கைத்*
*திருத்துதவி.*

**முடிவு:**

*இருந்தண கலிகோலக் காலெழிலா டுதுறைசீர்*
*பொருந்து மரத்துறை போன கந்த நன்பொன்சிவிகை*
*யருந்திட வொத்த முத்தீ செய்வேற் வரனளித்து*
*பெருந்தகை சீரினை யெம்பரமோ நின்று பேசுவதே*
*அடைத்தது மாமறைக்காடா. தங்கோயிற்*
*கதவினையன்*
*றுடைத்தது பாணன்றன் யாழின்னொலியை யுரகவிடந்*
*துடைத்தது தோணிபுரத்துக் கிறைவன் சுடரொளிவாய்*
*படைத்தது தனிமையை நள்ளற்றாசு பணிந்தடவே.*

*கா.க.*

**குறிப்பு:**

*இச்செய்யுள் மாணிக்கவாசகரால் எழுதப்பட்டது. அச்சிடப்பட்டுள்ளது. அச்சு நூல் அ.கீ.சு. நூலகத்தில் உள்ளது.*

# R. 8859

# சுந்தரர் திருப்பதிக முகவுரை

# SUNDARAR THIRUPPATIGA MUGAVRAI

Foll : 6; Extent : 4320 letters. This is preface to the Sundarar's Thiruppathigam.

**தொடக்கம்:**

*அன்பனை யருளினோக் கியங்கண் ஏருளிச் செய்வரா*
*முன்பெனை படித்தனென்றே மொழிந்தனை யாதலாலே*
*யென்பெயர் பித்தாவென்றே பாடுவா யென்றா*
*னாண்டவன் பெருந்தொண்ட ராண்டவள்ளலைப் பாடலுற்றார்.*
*க.*

**முடிவு:**

*...மாயகளங்கம்*
*அமையும் அமையும் பிரானே யமையும்*
*இமயவல்லி வாழியென்றேத்த*
*ஆனந்தத் தாண்டவங் காட்டி*
*ஆண்டுகொண்ட ருள்கை*
*நின்னருளினுக் கழகே*
*-திருச்சிற்றம்பலம்*

**குறிப்பு :**

*பெரியபுராணத்தில் சுந்தர மூர்த்தி நாயனாரின் பதிகங்களுக்கு முகவுரையாக இந்நூல் அமைந்துள்ளது. அச்சிடப்பட்டுள்ளது.*

# R. 8860

# சிவஞான போதகம்

# SIVAGNA PODAGAM

Foll : 34; Extent : 15,608 letters.

This manuscript is as same as D.1271, 1274, 1276 and R.1321, 1362, 1339 of this library manuscripts.

**குறிப்பு :**

*இந்நூலகத்தின் 'டி' எண் 1271, 1274, 1276, 'ஆர்' எண்1321, 1362, 1339 போன்ற சுவடிகளை ஒத்துள்ளதே இந்நூல் ஆகும்.*

# R. 8861

# திருக்கைலாய ஞான உலா

# THIRUKKAILAYA GNANA ULA

Foll : 3; Extent 2214 letters.

Same as described under R.3652 (paper) Printed.

**குறிப்பு :**

*இச்சுவடியிலுள்ள நூல், இந்நூலகத்திலுள்ள 'ஆர்' எண் 3652 பேப்பர் சுவடியிலுள்ளது போன்றதே அச்சிடப்பட்டுள்ளது.*

# R. 8862

# திருவாரூர் மும்மணிக் கோவை

## THIRUVARUR MUMMANIK KOVAI

Foll : 1; Extent : 756 letters. Printed.

On a single leaflet are written three stanzas of Charaman Perumal Nayanar.

**தொடக்கம்:**

**அகவல்**

*விரிகடல் பருகியன்று பட்டனன்*
*கருநிற மேகங்கண் முகடேறி*
*நுண்டுளி பொழியநோக்கி யொண்டோடி*
*பொலங்குழை மின்னப் புருவவில்*
*விட்டிலங் கெழிற்செவ்வாய்*

**முடிவு:**

*கட்டளைக் கலித்துறை*
*கண்ணு நுதலெந்தை காமரு கண்டமென் விருண்ட*
*விண்ணாலுரு மொடு மேலது கீழது கொண்டல*
*விண்ட மண்ணாமலை மேலிளமயாலான் மடமானைய*
